| | கமு/கமு/அல் - ஹிலால் வித்தியாலயம்<br>சாய்ந்தமருது | தரம் | புள்ளி |
|---|---|---|---|
| | மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 | 08 | |
| இஸ்லாம் | நேரம் : 02.00 மணித்தியாலயங்கள் | | |
| | சுட்டெண் : | | |

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

**01) மிகச் சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக**

1. **மிகவும் இரக்கமுடையவன்** என்பதனைக் குறிக்கும் அரபுப் பதம்.
   1. அல்வதூத். 2. அத்தவ்வாப். 3. அர்-ரஊப். 4. அர்-ரஹீம்.

2. அல் குர்ஆன் இறுதி வேதம் என்பதற்கான காரணங்களில் **அல்லாதது**.
   1. அல் குர்ஆனின் தனித்துவமான சிறப்புக்கள்.
   2. அல் குர்ஆனுக்கு முன் இன்னொரு வேதம் அருளப்பட்டமை.
   3. அல் குர்ஆன் இறுதி நபிக்கு அருளப்பட்டமை.
   4. அல் குர்ஆன் முழுமையாக பாதுகாக்கப்பட்ட வேதம்.

3. அல் குர்அன் அல்லாஹ்வின் அருள்மறை என்ற வகையில் அது உள்ளடக்கிய விடயங்களுள் **அடங்காதது**
   1. மறைவான விடயங்கள். 2. ஒழுக்க விழுமியம்.
   3. படிப்பினை தரும் வரலாறுகள். 4. வாழ்க்கைச் சட்டங்களை மறைத்தல்.

4. கிரேக்க மொழியில் அருளப்பட்ட வேதம்.
   1. ஸபூர் 2. புர்கான். 3. இன்ஜில். 4. தௌராத்.

5. பின்வருபனவற்றுள் ஈஸா (அலை) அவர்களுடன் தொடர்புடைய அற்புதங்கள்
   A - இரும்பை மிருதுவாக்கல். B - குஷ்டரோகிகளை குணப்படுத்தல்
   C - காற்றை வசப்படுத்தல். D - மரணித்தவர்களை உயிர்ப்பித்தல்
   1. A, B 2. B, C 3. B, D 4. A, C

6. கீழுள்ளவற்றை ஒழுங்கு படுத்தினால் கிடைக்கும் சரியான விடை

| | | | |
|---|---|---|---|
| 1 - | அபுல் பஷர் | - | A அல்லாஹ்வின் நண்பன் |
| 2 - | கலீலுல்லாஹ் | - | B அல்லாஹ்வின் ரூஹ் |
| 3 - | கலீமுல்லாஹ் | - | C மனிதர்களின் தந்தை |
| 4 - | ரூஹுல்லாஹ் | - | D அல்லாஹ்வுடன் பேசியவர் |

   1. D,C,B,A 2. D,A,B,C 3. A,B,C,D 4. C,A,D,B

7. **“ தொழுகை ஆரோக்கியம் தருகின்றது”** என்பது.
   1. தொழுகையின் மறுமைப் பயன் 2. தொழுகையின் உலகியல் பயன்
   3. தொழுகையின் நிபந்தனை 4. தொழுகையின் சுன்னத்

8. **“ மறதிக்கான சுஜூத் ”** என்பதைக் குறிப்பது.
   1. ஸஜ்தா சுக்ர் 2. ஸஜ்தா திலாவத் 3. ஸஜ்தா ஸஹ்வு 4. ஸஜ்தா கரீம்

9. **“ மகத்துவம் மிக்க இரவில் இதை நாம் அருளினோம் ”** என அல்குர்ஆன் குறிப்பிடும் வேதம்.
   1. ஸபூர் 2. தௌராத் 3. இன்ஜில் 4. புர்கான்

10. **“பாவங்களிலிருந்து எம்மை தூய்மைப்படுத்தும் மாதமே உன் வருகை நல்வரவாகட்டும்”** எனக் கூறியவர்.
    1. அபூபக்கர் (றழி) 2. உமர் (றழி) 3. அலி (றழி) 4. உஸ்மான் (றழி)

kalvi.lk

11. ஆலிம்களைக் கண்ணியப்படுத்தும் விடயங்களில் **அடங்காத** விடயம்.

1. ஆலிம்களை கௌரவத்துடன் நோக்குதல்.
2. ஆலிம்களின் அறிவுரைகளை செவிமடுத்தல்.
3. ஆலிம்களின் ஆலோசனையின்றி காரியமாற்றுதல்.
4. ஆலிம்களுடன் வீண் விவாதம் செய்யாதிருத்தல்.

12. மறுமையில் ஒரு மு∴மினின் தராசில் அதிக பாரத்தை ஏற்படுத்தும் நற் செயல்களில் ஒன்று.

1. நற் குணம். 2. தீய குணம். 3. விருந்தோம்பல் 4. தொழுதல்.

13. நபி (ஸல்) அவர்களின் வீட்டில் வளர்ந்த ஸஹாபி .

1. அபூ துஜானா (ரழி) 2. அபூ ஹப்ஸ் (ரழி)
3. அபூ தர் அல் கிபாரி (ரழி) 4. அபூ உமாமா (றழி)

14. " **யதீம்** " எனும் அரபுச் சொல் குறிப்பது

1. விதவை 2. தபுதாரன் 3. ஏழை 4. அநாதை

15. "**சுவர்க்கம் நுழைய மாட்டார்கள்**" என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட மூன்று பிரிவினர்களை உள்ளடக்கும் தொகுதி

1. கோள் சொல்பவன், புறம் பேசுபவன், மது அருந்துபவன்.
2. பெற்றோருக்கு துன்பமிழைப்பவன், மது அருந்துபவன், கோள் சொல்பவன்.
3. சூனியம் செய்பவன், பெற்றோருக்கு துன்பமிழைப்பவன், கொலை செய்பவன்.
4. தற்கொலை செய்பவன், கொலை செய்பவன், வட்டி சாப்பிடுபவன்.

16. நபி (ஸல்) அவர்கள் நம்பிக்கை, நாணயம் போன்ற பண்புகளில் சிறந்து விளங்கினார்கள் என்பதை குறிக்கும் சொற்றொடர்

1. அல் அமானத், அத்தப்லீ∴. 2. அல் பதானத், அஸ் ஸித்க்.
3. அல் அமீன், அஸ்ஸாதிக் 4. அல் பதானத், அல் பலாதத்.

17. நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செல்வதற்கு முன்னர் தன்னிடம் அமானிதமாக ஒப்படைக்கப்பட்ட அனைத்தையும் கையளித்த ஸஹாபி

1. அபூபக்கர் (றழி) 2. உமர் (றழி) 3. உஸ்மான் (றழி) 4. அலி (றழி)

18. அல்குர்ஆனின் 107 வது அத்தியாயம்.

1. சூரதுல் இஹ்லாஸ் 2. சூரதுல் பலக் 3. சூரதுல் மாஊன் 4. சூரதுல் லஹப்

19. அல்குர்ஆனில் தொழுகையுடன் இணைத்து வலியுறுத்தப்பட்ட கடமை.

1. கலிமா 2. நோன்பு 3. ஹஜ் 4. ஸகாத்

20. தொழுகையில் ஓர் அடியான் அல்லாஹ்வுக்கு மிக நெருக்கமாக இருக்கும் சந்தர்ப்பம்.

1. றுகூஉ 2. சுஜூது 3. இ∴திதால் 4. தவர்ருக்

(01x20 = 20)

**02) சரி பிழை என அடையாளமிடுக**

1 – தௌஹீதுக்கு முரனான அனைத்தும் ஈமான் எனப்படும். ( )
2 – அல்குர்ஆன் மனித வாழ்வின் அனைத்து துறைகளுக்கும் வழிகாட்டுகின்றது ( )
3 – தௌராத் வேதம் ஹிப்ரு மொழியில் அருளப்பட்டது. ( )
4 – தொழுகை சுவர்க்கத்தின் திறவுகோலாகும். ( )
5 – தொழுகையில் சூரதுல் பாதிஹா ஓதுவது சுன்னத்தாகும். ( )
6 – அல்குர்ஆனில் 16 இடங்களில் ஸஜ்தாவுடைய வசனம் இடம்பெற்றுள்ளது. ( )
7 – ஸகாதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தொழுகைக்கு முன் நிறைவேற்றப்படும். ( )
8 – பிராத்தனை மு∴மின்களின் ஆயுதமாகும். ( )
9 – திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் மஹ்ரமி எனப்படுவார்கள். ( )
10 – அல்குர்ஆனை ஓதுபவர் ஸகீனத் எனும் அமைதியை அடைந்து கொள்வார். ( )

(10X02 = 20)

03) பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக

( தொழுகை / நோன்பு / பாவங்களிலிருந்து / சூதாட்டம் / இறையச்சம் / யாசிப்பவன / திருத்தமாக / அம்பெறிந்து / அல் குர்ஆனில் / அநாதைகள் )

1 நிச்சயமாக ........................ மானக்கேடான காரியங்களிலிருந்தும் ................................ (மனிதனை) விலக்கி விடுகின்றது.

2 விசுவாசிகளே உங்களுக்கு முன்பிருந்தோர் மீது விதியாக்கப்பட்ட பிரகாரமே உங்கள் மீதும் ........................ விதியாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் ................................ உடையோர் ஆகலாம்.

3 ............................ கடிந்து கொள்ளாதீர் ............................ விரட்டாதீர்.

4 விசுவாசிகளே நிச்சயமாக மதுபானம் ...................... விக்கிரக ஆராதனை ...................... குறிகேட்பதும் ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயலாகும்.

5 இந்த குர்ஆனை நன்கு ...................... ஓதுங்கள். ............................ உங்களுக்கு இயன்றளவு ஓதுங்கள் .

(10X01 = 10)

## பகுதி 11

**முதலாம் வினா உட்பட ஏனைய வினாக்களில் எவையேனும் நான்கு வினாக்களை தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

**01. பின்வரும் வினாக்களுக்கு சுருக்க விடை தருக.**

1. வஹியின் இரு வகைகளையும் குறிப்பிடுக.

   ................................................ ................................................

2. ஹதீஸ் குத்ஸி என்றால் என்ன?

   ................................................................................................
   ................................................................................................

3. ஸுனன் அர்பஆ எனும் பிரிவில் உள்ளடக்கப்படும் ஹதீஸ் நுல்கள் எவை.

   ................................................ ................................................
   ................................................ ................................................

4. மௌழூஅத்தான ஹதீஸ்களை புணைந்துரைப்பதில் முதன் முதலில் ஈடுபட்டவரின் பெயர் என்ன.

   ................................................................................................

5. மிஃராஜ் என்றால் என்ன?

   ................................................................................................
   ................................................................................................

(05x02=10)

**02.** 1. நாமுஸுல் அஃழம் என அழைக்கப்பட்டவர் யார்?

   ................................................................................................

2. நபி (ஸல்) அவர்களின இரகசிய பிரச்சாரப் பணியின் போது இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட மூன்று தரப்பினர்களை குறிப்பிடுக

   ................................................ ................................................
   ................................................ ................................................

3. நபி (ஸல்) அவர்களின் தஃவா பணியின் போது எதிர் நோக்கிய சவால்கள் 05 தருக.

   ................................................ ................................................
   ................................................ ................................................
   ................................................ ................................................

(2+3+5=10)

**03.** 1. நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் சென்ற இரு இடங்களை தருக.

   ................................................ ................................................

2. நபி (ஸல்) அவர்களின் தூதை குறைஷியர்கள் எதிர்பதற்கான காரணம் 03 தருக

   ................................................ ................................................
   ................................................ ................................................

kalvi.lk

3. நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்களில் ஐவரின் பெயரைக் எழுதுக.

(2+3+5=10)

4\. 1. சிறுவனாக இருக்கும் போது நபி (ஸல்) அவர்களை நோக்கி கன்னியாடு பால் கறக்காது முடியுமானால் கறந்து கொள்ளுங்கள் என கூறிய ஸஹாபி யார்?

2. அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களுக்கு வழங்கப்பட்ட இரு சிறப்புப் பெயர்களும் எவை?

3. அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்களிடம் காணப்பட்ட பண்புகள் 05 தருக.

(2+3+5=10)

5\. 1. ஸபீஹுல்லாஹ் என அழைக்கப்பட்ட நபி யார்?

2. இப்றாஹிம் (அலை) அவர்கள் வாழ்ந்த மூன்று நாடுகளை குறிப்பிடுக

3. நபி இப்றாஹிம் (அலை) அவர்கள் பற்றி பின்வரும் விடயங்களை குறிப்பிடுக

A. பிறந்த ஊர்
B. சிறப்புப் பெயர்
C. மனைவியின் பெயர்
D. மகனின் பெயர்

(3+3+4=10)

6\. 1. அஜ்னபி, மஹ்ரமி என்றால் என்ன?.

அஜ்னபி

மஹ்ரமி

2. திருமணம் செய்வதற்கு தடைசெய்யப்பட்ட மூன்று பிரிவினரையும் குறிப்பிடுக.

3. திருமணம் செய்வதற்கு நிரந்தரமாக தடை செய்யப்பட்ட 05 உறவு முறையைக் குறிப்பிடுக.

(2+3+5=10)

7\. 1. சமுகப் பணி என்றால் என்ன?.

2. பொதுச் சொத்துக்களை நாசம் செய்வதால் ஏற்படும் விளைவுகள் 03 தருக.

3. சமுதாயப்பணிகள் 05 எழுதுக.

(2+3+5=10)

kalvi.lk

# GRADE 6,7,8

STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**TAMIL MEDIUM**

850/= Monthly

**ENGLISH MEDIUM**

1000/= Monthly

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page